# ஆசிரியர் தகுதி தேர்வு ஆகஸ்டு 25-ந் தேதி தொடங்குகிறது

## 31-ந் தேதி வரை நடைபெறும்

சென்னை, ஜூலை 8–

டெட் எனப்படும் ஆசிரியர் தகுதி தேர்வின் முதல் தாள் அடுத்த மாதம் (ஆகஸ்டு) 25–ந் தேதி முதல் 31–ந் தேதி வரை நடைபெறும் என்று தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.

கணினி அடிப்படையில் இந்த தேர்வுகள் நடைபெறும். இந்த தேர்வு எழுதுவதற்காக 2 லட்சத்து 30 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

கணினி அடிப்படையிலான தேர்வுக்கான பயிற்சி தேர்வில் பங்கேற்க விரும்பும் விண்ணப்ப தாரர்களுக்கு தேர்வு தேதிக்கு 15 நாட்களுக்கு முன்னதாகவே அதற்கான வாய்ப்பு வழங்கப்படும். மேலும் தேர்வு அட்டவணைகள் மற்றும் அனுமதி அட்டைகள் தொடர்பான விவரங்கள் ஆகஸ்டு 2–வது வாரத்தில் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் வழங்கப்படும்.

மேலும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஆசிரியர் பணிகளுக்கு மறு நியமன தேர்வான போட்டித்தேர்வை வருகிற டிசம்பர் மாதம் நடத்த உள்ளது.

1874 பட்டதாரி ஆசிரியர்கள், 3987 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு போட்டித் தேர்வு நடத்தப்படுகிறது.

இதற்கு 4 லட்சத்து 10 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். இந்த தேர்வுக்கான அட்டவணை பின்னர் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

அச்சரப்பாக்கம் விபத்தில் 6 பேர் பலி

## பிரதமர் மோடி இரங்கல்

புதுடெல்லி, ஜூலை 8–

அச்சரப்பாக்கம் அருகே இன்று காலை அரசு பஸ் முன்னால் சென்ற லாரி மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் 6 பேர் பலியானார்கள். இதற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், 'செங்கல்பட்டு அருகே நடந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்தது வேதனை அளிக்கிறது.

எனது எண்ணங்கள் அன்புக்குரியர்களை இழந்தவர்களின் குடும்பத்தோடு உள்ளது. காயம் அடைந்துள்ளவர்கள் விரைவில் குணம் அடைய வேண்டும்' என்று குறிப்பிட்டு உள்ளார்.

## அதானி ஈவ்னிங் எஜூகேஷன் சென்டர் மாணவர்களுக்கு பயிற்சி



திருவள்ளூர் மாவட்டத்தில், காட்டுப்பள்ளி துறைமுகத்தை சுற்றி அமைந்துள்ள பஞ்சாயத்து கிராமங்களில் அதானி ஈவ்னிங் எஜூகேஷன் புரோகிராம் என்ற பெயரில் அரசுப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புற மாணவர்களுக்கு இலவச கல்வி பயிற்சியினை அதானி குழுமம் வழங்கி வருகிறது. மாலை நேரத்தில், வசதியற்ற பின்னணிகளை கொண்ட, அரசு பள்ளிகளை சேர்ந்த மாணவர்களுக்கு கூடுதல் கற்பித்தலை வழங்கி வரும் இத்திட்டத்தின் மூலம் அரசின் 10–ம் வகுப்பு மற்றும் 12–ம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் இதில் பயிற்சி பெற்ற கிராமப்புற மாணவர்கள் நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றனர். அதானி மாலை நேர கல்வி மைய வகுப்புகளில் பங்கேற்றதன் மூலம் இம்மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி எட்டப்பட்டிருப்பது தெரியவந்திருக்கிறது. காட்டுப்பள்ளியை சேர்ந்த மாணவர் எஸ்.மனுகுமார் 500–க்கு 415 மதிப்பெண்களுடன், காட்டுப்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மாணவர் என்று பெருமையை இவர் பெற்றிருக்கிறார். 357 மதிப்பெண்களுடன் பி.கண்ணன் 2–ம் இடத்தையும், 330 மதிப்பெண்களுடன் எஸ்.தேஜஸ் 3–ம் இடத்தையும் பிடித்தனர்.


**E-Auction Sale Notice**

**M/S. SURANA CORPORATION LIMITED (In Liquidation)**

Reg. Off.: NO. 30 GNT ROAD, MADHAVARAM CHENNAI – 600110.
Liquidator : Chandramouli Ramasubramaniam
(C Ramasubramaniam, Insolvency Professional)
Liquidator Address: 'RAJI' 3B1, 3rd Floor, Gaiety Palace, No. 1L, Blackers Road, Mount Road, Chennai - 600002
Email: fcs.rms@gmail.com & srinidhicra@gmail.com
Telephone No: +91-9884068292 | 044-42606292 | 044-28528292
Registration No: IBBI/IPA-002/IP-N00052/2016-17/10096

**E- Auction**

Sale of Assets under Insolvency and Bankruptcy Code, 2016
**Date & Time of Auction:** Friday 22nd July 2022 at 11.00 AM to 12.00 PM
**(With unlimited extension of 5 minutes each)**

Sale of assets and properties owned by M/s. **Surana Corporation Limited** (In Liquidation) forming part of Liquidation Estate will be done by the Liquidator appointed by the Hon'ble National Company Law Tribunal, Chennai Bench vide order dated 25th October, 2019. The sale will be done by the undersigned through the e-auction platform WWW.BANKAUCTIONS.IN

| Assets | Reserve Price (in INR) | Earnest Money Deposit (in INR) | Mode of Sale (E-auction) |
|---|---|---|---|
| PLANT & MACHINERY, OFFICE EQUIPMENT, AIR CONDITIONERS & UTILITIES FOR GOLD ORNAMENTS PRODUCTION | 23,85,000/- | 2,38,500 /- | Lot |

**Terms and Condition of the E-Auction are as under**:

1. E-Auction will be conducted on **"AS IS WHERE IS", "AS IS WHAT IS" AND "WHATEVER THERE IS BASIS"** as such sale is without any kind of warranties and indemnities through approved service provider **M/s. 4CLOSURE.**
2. Kindly note that any transportation expenses, package expenses, Shifting charges, Electricity Charges and any other incidental expenses occurring while handing over the assets to the successful bidder will be borne by the respective bidder only, and the liquidator shall not be responsible for any such expenses at any cost. Also note that the successful bidder has to ensure the safety precautions for taking over the assets without causing any damages to the other assets available in the premises. If any damages occur the same shall be borne by the successful bidder only.
3. The EMD shall be payable through DD/NEFT/RTGS in the account of **"Surana Corporation Limited - in Liquidation", A/c. No. 38912925044 Bank and Branch: State Bank of India, Overseas Brach, Chennai and IFSC Code: SBIN0004804.**
4. The Bids can be submitted through email or can be submitted at the Liquidator's office before 06.00 PM on 20th July 2022. The bid form can be downloaded from the website of **WWW.BANKAUCTIONS.IN**
5. The Complete E-Auction process document containing details of the Assets, online e- auction Tender Form, Terms & Conditions of online auction sale are available on website **WWW.BANKAUCTIONS.IN** Contact: Mr.C.Ramasubramaniam –Liquidator @ 9884068292 E-Mail: fcs.rms@gmail.com and for technical support, you can contact Mr. Subba Roa, at +91-08142000061 E-mail: subbarao@bankauctions.in & info@bankauctions.in
6. The highest offer received from E-Auction will be declared successful. The Liquidator reserves the right to choose in announcing the successful bidder based on the highest bid received.
7. Last date and time of submission of EMD & Tender documents is **6.00 p.m. on Wednesday, 20th July 2022.**
8. The date & time of e-Auction on **Friday, 22nd July 2022 between 11.00 AM & 12.00** Noon.
9. If any offer is received within the last 5 minutes of closure time, the biding time will be extended automatically by another 5 minutes and if no higher bid is received within in the extended 5 minutes, the auction will automatically get closed at the extended 5 minutes.
10. The intended bidder who have deposited EMD and require assistance in creating login id and password may contact the liquidator office on phone +91 98840 68292 through email at **fcs.rms@gmail.com** & **srinidhicra@gmail.com** and for technical support, you can contact Mr. Subbarao @ 08142000061
11. The EMD amount of unsuccessful Bidders will be refunded within one week.
12. The bidder who submits highest offer (more than Reserve Price) on closure of online auction shall be declared successful bidder subject to approval by the Liquidator. The liquidator reserves his rights to reject any or all of the offers or accept offer for one or more properties received without assigning any reasons whatsoever at any stage.
13. If none of the intended bidder participating in the E-Auction has not increasing the bid amount, the EMD amount of the bidders will be forfeited.
14. Upon confirmation of sale, the purchaser shall deposit 25% of sale price (including EMD) immediately and the balance sale consideration within 90 days of the date of such demand, provided that payment made after 30 days shall attract interest at the rate of 12% as per Sub Regulation 12 of Regulation 1 of Schedule I of IBBI (Liquidation Process) Regulations 2016 as amended from time to time.
15. The sale shall be cancelled if the payment is not received within 90 days and the amount paid will be forfeited. For more particulars about e-auction, the bidders are requested to go through the tender form thoroughly.
16. In addition to the final auction value, the successful bidder has to pay 18% of GST for the auctioned asset.
17. The highest bidder would bear the applicable charges/ fees payable for ownership transfer, registration fee etc., as applicable under law. The Liquidator will not be responsible for any charge, lien under sale. The Liquidator has absolute right to accept or reject the bid or adjourn, postpone, extend the auction without assigning any reasons whatsoever. No objections will accrue to the Liquidator in such an event.
18. The properties mentioned above can be inspected by the prospective bidders at the site with prior appointment contacting Mr. C. Ramasubramaniam, Liquidator (+91 9884068292).
19. Further inquiries, if any and/or terms and conditions for sale can be obtained from the Liquidator office at phone numbers mentioned above.
20. The advertisement will be valid for 90 days from the date of advertisement. The properties mentioned above can be inspected by the prospective bidders at the site with prior appointment contacting Mr. C. Ramasubramaniam (+91 9884068292)

Sd/-
CHANDRAMOULI RAMASUBRAMANIAM
(C.RAMASUBRAMANIAM)
LIQUIDATOR-SURANA CORPORATION LIMITED

**Date:** 08.07.2022
**Place:** Chennai




திருவண்ணாமலையில் நிறுவப்பட்டுள்ள கருணாநிதி சிலை.

## திருவண்ணாமலையில் இன்று மாலை

# கருணாநிதி சிலையை மு.க. ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

திருவண்ணாமலை, ஜூலை.8–



முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் 2 நாட்கள் சுற்றுப்பயணமாக இன்று திருவண்ணாமலை வந்தார். திருவண்ணாமலை மாவட்ட எல்லையான கீழ்பென்னாத்தூரில் மாவட்ட தி.மு.க. சார்பில் முதல்–அமைச்சர் மு. க ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. அமைச்சர் எ.வ. வேலு, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி மற்றும் எம்.எல்.ஏ.க்கள் கட்சி நிர்வாகிகள் சால்வை அணிவித்து பூங்கொத்து கொடுத்து மேளதாளத்துடன் பிரம்மாண்டமாக வரவேற்றனர்.

**இல்லம் தேடி கல்வி திட்டம்**

இதைத் தொடர்ந்து கீழ்பென்னாத்தூர் தாலுகா ஆராஞ்சி கிராமத்திற்கு முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்றார். அங்கு பள்ளிக்கல்வித்துறை சார்பில் இல்லம் தேடி கல்வி திட்டம் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இது தமிழகத்தில் 2 லட்சமாவது இல்லம் தேடி கல்வி மையமாகும்.

இதுவரை இல்லம் தேடி கல்வித் திட்டத்தில் 7.26 லட்சம் தன்னார்வலர்கள் பதிவு செய்துள்ளனர். 2 லட்சம் கற்பிக்கும் தன்னார்வலர்கள், 34 லட்சம் கற்கும் மாணவர்கள் உள்ளனர். இந்த திட்டத்தில் தினமும் 3 லட்சம் மணி நேரம் கற்பிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து இன்று மாலையில் திருவண்ணாமலை மாடவீதி பெரிய தெருவில் உள்ள பழைய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் சிவாச்சாரியார்களுக்கு ஆடைகள் வழங்கும் நிகழ்ச்சியில் முதல்–அமைச்சர் மு. க.ஸ்டாலின் பங்கேற்கிறார்.

**கருணாநிதி சிலை**

இதையடுத்து திருவண்ணாமலை வேலூர் சாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அண்ணா நுழைவு வாயிலை திறந்து வைக்கிறார். பின்னர் வெண்கலத்தினால் செய்யப்பட்ட கருணாநிதியின் உருவச் சிலையை திறந்து வைக்கிறார். கருணாநிதியின் சிலை மட்டும் 8 அடி உயரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதன் பீடம் 13 அரை அடி உயரம் அமைந்துள்ளது. மொத்தமாக 21 அடி உயரத்தில் கருணாநிதி சிலை பிரமாண்டமாக உள்ளது.

கிரிவலப் பாதையில் திருவண்ணாமலை நகரத்தை நோக்கியபடி கருணாநிதி சிலை அமைக்கப்பட்டுள்ளது.

**பொதுக்கூட்டம்**

இதனை தொடர்ந்து ஈசான்ய மைதானத்தில் நடைபெறும் தி.மு.க. பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசுகிறார்.

தொடர்ந்து நாளை காலை 9 மணி அளவில் திருவண்ணாமலை அருணை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். பின்னர் திருவண்ணாமலை திருக்கோவிலூர் சாலையில் நடைபெறும் அரசு விழாவில் முதல்–அமைச்சர் மு.க ஸ்டாலின் கலந்து கொண்டு ரூ.1,103 கோடி மதிப்பில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களை தொடங்கி வைத்து பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழா பேருரை ஆற்றுகிறார்.

இதில் ஒரு லட்சத்து 67 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூ.674 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. மேலும் ரூ.429 கோடி மதிப்பில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி கட்டி முடிக்கப்பட்ட திட்டங்களை தொடங்கி வைக்க உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்காக சுமார் 15,000 பேர் அமரும் வகையில் பிரம்மாண்ட பந்தல் மேடை அமைக்கப்பட்டுள்ளது. முதல்–அமைச்சர் மு. க. ஸ்டாலின் வருகையொட்டி திருவண்ணாமலையில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஏடிஜிபி தாமரைக் கண்ணன் தலைமையில் ஒரு ஐஜி, 3 டி.ஐ.ஜி., 7 போலீஸ் சூப்பிரண்டு உட்பட 2,200 போலீசார் திருவண்ணாமலையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## மாற்று திறனாளிகளின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்

### மக்கள் நீதி மய்யம் அறிக்கை

சென்னை, ஜூலை. 8–

மக்கள் நீதி மய்யம் கட்சியின் மாநில செயலாளர் செந்தில் ஆறுமுகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

மாற்றுத் திறனாளிகளின் கூட்டமைப்பான டிசம்பர் 3 இயக்கம் சார்பில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அண்மையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டு வங்கிகளில் தங்களின் உரிமை மறுக்கப்படுவது குறித்து எடுத்துரைத்து மத்திய அரசின் கவனத்தை ஈர்த்தனர்.

சட்டத்தின் அடிப்படையில் பார்த்தாலும், மனிதாபிமான அடிப்படையில் பார்த்தாலும் மாற்றுத்திறனாளிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நியாயமானவை. இத்தனை ஆண்டுகள், இந்த உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்ததே ஒரு சமூக அநீதியாகும்.

வாழ்வாதாரத்துக்காகப் போராடும் மாற்றுத் திறனாளிகளை, உரிமைக்காகவும் போராட வேண்டிய சூழலுக்குத் தள்ளக்கூடாது. இந்த விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் தலையிட்டு, அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அவர்களுக்கு உரிய நீதியைப் பெற்றுத்தர வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கோவையில் 3-வது நாளாக தொடரும் சோதனை

# அ.தி.மு.க. பிரமுகர் தொடர்புடைய இடங்களில் ஆவணங்கள்- லேப்டாப் பறிமுதல்

கோவை, ஜூலை.8–

கோவை வடவள்ளியை சேர்ந்தவர் என்ஜினீயர் சந்திரசேகர். இவர் கோவை தெற்கு புறநகர் மாவட்ட அ.தி.மு.க. எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளராக உள்ளார்.

**வருமான வரி சோதனை**

நேற்று முன்தினம் சந்திரசேகர் வீடு, அவரது பெற்றோர், சகோதரர், சகோதரிகள் வீடு, அவர் நடத்தி வரும் ஆலயம் அறக்கட்டளை உள்பட 6 இடங்களில் வருமானவரி சோதனை நடந்தது.

இதேபோல் சந்திரசேகருக்கு சொந்தமான புலியகுளம் பெரியார் நகரில் உள்ள ஆலயம் அறக்கட்டளை மற்றும் மருதமலையில் உள்ள அவரது சகோதரர் செந்தில்பிரபு வீட்டிலும் சோதனை நடைபெற்றது.

சந்திரசேகரின் சகோதரர் வீட்டில் காலையில் தொடங்கிய சோதனையானது இன்று அதிகாலை 2.45 மணிக்கு முடிவடைந்தது. சோதனை முடிந்து சென்ற அதிகாரிகள் செந்தில் பிரபுவின் செல்போன் மற்றும் சில முக்கிய ஆவணங்களை எடுத்து சென்றதாகவும் கூறப்பட்டது.

மேலும் சந்திர சேகர் வீட்டில் நடந்த சோதனையின் போது, அவரது வீட்டில் இருந்து சில ஆவணங்கள் மற்றும் லேப்டாப் ஆகியவற்றை வருமானவரித்துறை எடுத்து சென்றதாகவும், லேப்–டாப்பில் ஏதாவது முக்கிய தகவல்கள் இருக்கிறதா என்பது குறித்தும் அதிகாரிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

**3–வது நாளாக சோதனை**

இதற்கிடையே இன்று 3–வது நாளாக சந்திரசேகருக்கு சொந்தமான ஆலயம் அறக்கட்டளை மற்றும் அவருக்கு தொடர்புடைய கே.சி.பி நிறுவனங்களில் இன்றும் வருமான வரி சோதனை நடந்தது.

2 இடங்களிலும் 10–க்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். அலுவலகங்கள் முழுவதும் தீவிர சோதனை மேற்கொண்ட அதிகாரிகள் ஆவணங்களை கைப்பற்றியதுடன், அங்கிருந்தவர்களிடம் விசாரணையும் மேற்கொண்டனர்.

## வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில்

# பி.டெக் சேர்க்கை முடிவு வெளியிடப்பட்டது

வேலூர், ஜூலை.8–

வி.ஐ.டி. பல்கலைக் கழகத்தில் நடப்பு கல்வி யாண்டில்(2022) பி.டெக் பட்டப் படிப்பில் சேருவதற்கான சேர்க்கை முடிவுகள்வெ இன்று வெளியிடப்பட்டுள்ளது.

**வி.ஐ.டி. சேர்க்கை முடிவு**

2022 ஆம் கல்வியாண்டில் துபாய், குவைத், மஸ்கட் மற்றும் கத்தார் உள்ளிட்ட வெளிநாடுகளிலும் உள்நாட்டிலுமாக 123 மையங்களில் நுழைவுத் தேர்வு நடந்தது.

(30–06–22 முதல் 06–07–22 வரை) கணினி முறையில் மாணவர்கள் தேர்வு எழுதினர். மாணவர்கள் சேர்க்கை முடிவுகளை www.vit.ac.in என்ற இணையதளம் வழியாக தெரிந்து கொள்ளலாம். விஐடி மாணவர்களை ஆன்லைன் கவுன்சிலிங்கில் பங்கேற்க ஊக்குவிக்கிறது மற்றும் சேர்க்கை உறுதி செய்ய அதிகபட்ச வாய்ப்புகளை வழங்குகிறது. சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு வகுப்புகள் செப்டம்பர் 2வது வாரத்தில் தொடங்கும்.

விஐடியின் நுழைவுத் தேர்வின் மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெறும். இன்று தொடங்கி ஆகஸ்டு 8–ந் தேதி வரை கலந்தாய்வு நடைபெறும்.

ரேங்க் 1 முதல் 1,00,000 வரை எடுத்த மாணவர்களுக்கு விஐடி வேலூர், சென்னை, ஆந்திரபிரதேசம், மற்றும் போபாலில் இடம் கிடைக்கும்.

1,00,000 க்கும் மேலாக ரேங்க் பெற்ற மாணவர்களுக்கு விஐடி ஆந்திரபிரதேசம் மற்றும் விஐடி போபாலில் மட்டும் தான் இடம் கிடைக்கும்.

ஜி.வி பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சிறப்பு கல்வி உதவி (Scholarship under GV School Development Programme) மத்திய,மாநில கல்வி வாரியம் நடத்தும் +2 தேர்வில் மாநில அளவிலான முதலிடம் பெற்றவர்களுக்கு விஐடியில் பிடெக் படிப்பின் 4 ஆண்டுகளும் 100 சதவீத படிப்பு கட்டண சலுகையும், 1 முதல் 50 ரேங்க் பெற்றவர்களுக்கு 75 சதவீத படிப்பு கட்டண சலுகையும், 51 முதல் 100 ரேங்க் பெற்றவர்களுக்கு 50 சதவீத படிப்பு கட்டண சலுகையும், 101 முதல் 1000 ரேங்க் பெற்றவர்களுக்கு 25 சதவீத படிப்பு கட்டண சலுகையும் ஜிவி பள்ளி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், மற்றும் மத்திய பிரதேசத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயின்று +2 தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் 1 மாணவருக்கும் 1 மாணவிக்கும் விஐடியில் 100 சதவித கல்வி கட்டண சலுகையும், இலவச விடுதி வசதியும், உணவு வசதியும் விஐடி ஸ்டார்ஸ் திட்டத்தின்கீழ் சேர்க்கை வழங்கப்பட உள்ளது.

தமிழகத்தில் 18 முதல் 59 வயதுக்குட்பட்ட அனைவருக்கும்

# கொரோனா தடுப்பூசி மையங்களில் பூஸ்டர் தடுப்பூசி போட அனுமதிக்க வேண்டும்

## மத்திய அரசுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கோரிக்கை

சென்னை, ஜூலை. 8–

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

**ஆய்வு கூட்டம்**

மத்திய சுகாதாரத் துறை மந்திரி மாண்சுக் மாண்டவியா தலைமையில் நடந்த கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு, மலேரியா போன்ற நோய்களின் நிலை பற்றியும், அதை தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு தமிழ்நாட்டில் கொசுக்களால் பரவும் நோய்கள் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

**டெங்கு காய்ச்சல்**

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் இந்த ஆண்டு இதுவரை 2,882 பேருக்கு கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது 140 பேர் மட்டுமே சிகிச்சையில் உள்ளனர். டெங்கு தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளில் 21 ஆயிரம் கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

**மலேரியா**

தமிழ்நாட்டில் மலேரியா நோய் தொற்று பெருமளவில் குறைந்து வருகிறது. சென்ற ஆண்டு 772 பேரும், இந்த ஆண்டு இதுவரை 140 பேர் மட்டுமே பாதிக்கப் பட்டு உள்ளனர்.

தமிழ்நாட்டில் 17 மாவட்டங்கள் மலேரியா நோய் பரவல் இல்லாத மாவட்டங்களாக உள்ளது. மலேரியாவை முற்றிலும் ஒழிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யானைக்கால் நோய் ஒழிப்பு பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. நோய் பரவல் இல்லாத நிலைக்கான சான்று பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழக அரசு சார்பில் யானைக்கால் நோயாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வீதம் உதவித் தொகை 8,023 பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக ரூ.9.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜப்பானிய மூளைக் காய்ச்சலால் இதுவரை 13 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசி திட்டம் தமிழ்நாட்டில் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, விருதநகர், மதுரை, திருவாரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கரூர், திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் ஆகிய 14 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு 9–ல் இருந்து 15 மாதங்களுக்கும், 16–ல் இருந்து 24 மாதங்களுக்கும் 2 தவணைகளில் செலுத்தப்பட்டு வருகிறது.

மேற்கூறிய அனைத்து நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் தமிழ்நாட்டில் 78,78,980 கொரோனா தடுப்பூசிகள் இருப்பில் உள்ளன எனவும் அவற்றை பயன்படுத்தி தமிழ்நாட்டில் 18 வயது முதல் 59 வயதுக்குட்பட்ட அனைருக்கும் அரசு கொரோனா தடுப்பூசி மையங்களிலேயே முன் எச்சரிக்கை தவணை தடுப்பூசி (பூஸ்டர்) போட அனுமதிக்குமாறும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.





## மார்ஸ் இன்கார்பரேட்டட் பிரசாரம்

மார்ஸ், இன்கார்பரேட்டட் இன்று அதன் #HERETO-BEHEARD பிரச்சாரத்தின் இந்திய விரிவாக்கத்தை அறிவித்துள்ளது. 2021–ம் ஆண்டில், MARS 88 நாடுகளில் உள்ள 10,000 பெண்களிடம் பெண்கள் தங்கள் முழு திறனையும் அடைய என்ன மாற்ற வேண்டும் என கேட்டது. இந்தியாவை சேர்ந்த 250 பேர் உள்பட பதிலளித்தவர்களில், ஆணாதிக்க தடைகளை உடைக்க பணியமர்த்துனர்கள், சக ஊழியர்கள், அரசாங்கம், சமூகங்கள் மற்றும் ஆண்களிடமிருந்து முறையான மாற்றத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர் என்று மார்ஸ் ரிக்லி இந்தியாவின் தேசிய பொது மேலாளர் கல்பேஷ் பர்மர் தெரிவித்தார்.





## சிறப்பு நோயியல் கண்டறியும் வசதி

மெட்ரோபோலிஸ் ஹெல்த்கேர் நிறுவனம், இந்தியாவிலேயே முன்னணி நோய் கண்டறியும் மையங்களில் முன்னணியில் திகழ்கிறது. இந்நிறுவனம் முன்னேறிய நோய் கண்டறியும் பரிசோதனை முறையை செல்லிலிருந்து மூலக் கூறுமரபியல் மூலம் உயர் வகையிலான நோய் கண்டறியும் முறையை அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய செல்முறையில் மெட்ரோபோலிஸ் பல்வேறு சிறப்பு பரிசோதனைகளை கருவுற்றிருக்கும் போதும், புற்றுநோய், பரவும்நோய்கள் மற்றும் உறுப்பு மாற்று நிர்வாக முறை மூலம் செயல்படுத்தும் என்று நிர்வாக இயக்குநர் அமீராஷா, தலைமை மருத்துவ அதிகாரி கீர்த்திசத்தா ஆகியோர் தெரிவித்தனர்.


**IN THE COURT OF THE DISTRICT MUNSIF AT TAMBARAM**
**R.A.No.4 of 2021**
**in**
**O.S.No. 226 of 2005**

1.Mr.R.Ragunathan, S/o.Rajadurai,
2.Keertana Gayathri, D/o.R.Ragunathan,
3.Minor Vandhana Gayathri, Minor rep by her next Friend, Father/Guardian Mr.R.Ragunath.
:Petitioners/Plaintiffs

Vs

1.Mr.A.Sampathraj,
2.R.Jayakumari,
3.Punitha,
4.Jeeva Murugesan,
5.B.D.Manoharan,
6.K.Ramina.
:Respondents/Defendants

To
D-2 R.Jayakumari,
W/o.V.S.Ramamoorthy,
No.4, Ganesh Ram Colony,
Srinivasa Avenue, R.A. Puram,
Chennai-28.
Now residing at :-
No.1/10, 'C' Block, Navin Apartments,
Tara Garden, 4/318, OMR Road,
Kottivakkam, Chennai – 41.

Madam,

Please take notice that the R.A.No.4/2021 in O.S.No.226/2005 is filed by the Petitioners/ Plaintiffs. The same has been posted to 20/07/2022, for your appearance at 10.30am before this Hon'ble District Munsif Court in person or through duly instructed counsel to file your objections, failing which the same will be heard and decided in your absence.

MR.N.KARUNANIDHI
ADVOCATE FOR PETITIONERS/PLAINTIFFS


## கிரியா பல்கலை.யின் ஐஎஃப்எம்ஆர் ஜிஎஸ்பி மாணவர்கள் வரவேற்பு



பிராரம்ப் 2022: இந்த கல்வியாண்டில் எம்பிஏ கல்வி திட்டத்தில் இணைந்து 2024–ம் ஆண்டில், படிப்பை நிறைவு செய்ய இருக்கும் புதிய மாணவர்களுக்கான அறிமுக செயல் திட்டமும் அவர்களை வரவேற்கும் நிகழ்வும் கிரியா பல்கலையின் ஐஎஃப்எம்ஆர் ஜிஎஸ்பியால் ஸ்ரீ சிட்டி கல்வி வளாகத்தில் நடைபெற்றது. கோவிட் தொற்றால் 2 ஆண்டுகளுக்கு பிறகு கல்வி வளாகத்தில் நேரடி பங்கேற்பின் மூலம் இந்த அறிமுக செயல் திட்டம் நடைபெறுவதால் இது தனிச்சிறப்பானது. பிசினஸ் மேலாண்மையில் எதிர்கால தலைவர்களாக உருவாகவிருக்கும் இம்மாணவர்களுக்கு ஒரு முழுமையான, விரிவான கற்றல் சூழலை உருவாக்க வேண்டுமென்பதே ஐஎஃப்எம்ஆர் ஜிஎஸ்பியின் குறிக்கோளாகும். இந்த ஆண்டு இந்தியாவில் 22 மாநிலங்களிலிருந்து எம்பிஏ கல்வி திட்டத்தில் இணைந்திருக்கும் 178 மாணவர்களை பல்கலைக்கழகம் மகிழ்ச்சியுடன் வரவேற்றது. இதில் டீன் லட்சுமி குமார், கிரண்ட்ஃபாஸ் பம்ப்ஸ் முன்னாள் நிர்வாக இயக்குனர் ரங்கநாத் என்.கிருஷ்ணா பங்கேற்றனர்.


## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் சென்னை 600078 கே.கே.நகர், டாக்டர் காணு நகர், நெசப்பாக்கம் கணகசபை 6–வது தெரு 5–வது குறுக்கு தெரு கதவு எண்.99–ல் வசிக்கும் திரு.விஸ்வநாதன் அவர்களின் குமாரர் திரு.வி.வினோத் அவர்கள், சென்னை – 600078 எம்.ஜி.ஆர் நகர், அகிலன் தெரு, கதவு எண்.40/23 என்ற முகவரியில் வசிக்கும் திரு.இராமசாமி அவர்களின் குமாரர் திரு R.கோபி அவர்களின் சொத்து விவரம் தென் சென்னை பதிவு மாவட்டம், பம்மல் உப பதிவு மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம்ஸ்ரீபெரும்பத்தூர் வட்டம். 57ம் நெம்பருக்கு புதிய எண்.80, கெருகம்பாக்கம் கிராமம், பட்டா எண்: 138, சர்வே எண்.561–ல் அடங்கிய மனை எண்.56 க்கு விஸ்தீரணம் 760 சதுரடி கொண்ட காலிமனை, திரு.கோபி பெயரில் 2006–ஆம் ஆண்டு பம்மல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள பத்திர எண்: 3935/2006 நாள் : 5.10.2006 மேற்கண்ட சொத்திற்காக ஒரு செட்டில்மென்ட் பத்திரம் திருமதி.G.அமுதா அவர்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்.அதன் வருடம் 2022 பம்மல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள பத்திர எண்: 5777/2022 தேதி: 7.6.2022 எனவே மேற்கண்ட சொத்தின் உரிமையாளர் திருமதி.G.அமுதா என்பவரிடமிருந்து எனது கட்சிக்காரர் திரு.வி.வினோத் என்பவர் ஒரு விற்பனை ஒப்பந்த பத்திரம் எழுதியுள்ளார். தேதி 4.7.2022 மேற்கண்ட சொத்தில் யாருக்கேனும் உரிமை இருந்தாலோ அல்லது இக்கிரையத்தில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தாலோ இன்றைய தேதியில் இருந்து 10 நாட்களுக்குள் கீழ்காணும் விலாசத்தில் எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும் அப்படி தவறும் பட்சத்தில் இச்சொத்து மற்றும் அதன் கிரையம் தொடர்பாக யாரும் உரிமையோ அல்லது ஆட்சேபனையோ தெரிவிக்க இடமில்லை என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**K.PARANTHAMAN,** M.A.,B.L..,
Advocate Chennai High Court
No.11/13, S.R. Complex. Bharathidasan Colony,
K.K. Nagar, Chennai–600 078, Mobile:98404 48476.